STC.No. 862/2024
நாள் 22.01.2026.
P.W.2 – (கருப்பையா )
புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜரில்லை. இணையவழி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.
எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுதப்படிக்க தெரியும். இந்த வழக்கின் புகார்தாரரை எனக்கு 20 ஆண்டுகளாக தெரியும். புகார்தாரர் என் பள்ளியின் சக மாணவர் ஆவார். நான் டிக்கடை வைத்துள்ளேன். என் கடையில் எனக்கு ஒரு நாளைக்கு ரூ.1,000/– முதல் ரூ.1,500/– வரை வரும். எனக்கு எதிரியை தெரியும். அவர் பெயர் நேருஜி அவரை 5,6 முறை பார்த்துள்ளேன். எதிரி 30.08.2021 அன்று ரூ.14 லட்சத்தை புகார்தாரரின் வீட்டில் வைத்து வாங்கினார். நான் எதிரியுடன் பேசியுள்ளேனா என்றால் இல்லை, பார்த்துள்ளேன். 2022ம் ஆண்டு ராஜா என்பவர் சிவராஜ் பெயருக்கு ஒரு உறுதிமொழி பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. எ.சா.ஆ.1ல் 1வது சாட்சி கையொப்பமாக உள்ளது என்னுடைய கையெழுத்து என்றால் இல்லை. 31.07.2021 அன்று ஒரு சட்ட அறிவிப்பு கொடுத்துள்ளது தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

அந்த சட்ட அறிவிப்பில் பாலமுருகன் பூபதி மற்றும் நான் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. புகார்தாரர் சொல்லி சாட்சியம் அளிக்க வந்தேன். என் நிருபண வாக்குமூலம் விபரங்கள் நான்தான் சொன்னேன். நான் எதிரியை பார்க்கவில்லை என்றாலும் புகார்தாரருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி அவகாசம் கோறப்பட்டது. ஏற்கனவே, சாட்சி திரும்ப அழைக்க மனு செய்து குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பு வழங்கப்பட்டதால் அந்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.